**பத்தாம் வகுப்பு (இரண்டாம் தாள்)**

**(இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை, கடிதம், மொழிப்பயிற்சி)**

**இயல்: 1**

1. உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்கள் **முதல் எழுத்துக்கள்**

2. முதல் எழுத்துக்களைச் சார்ந்து வருவது **சார்பு எழுத்துக்கள்**

3. குறுக்கம் எத்தனை வகைப்படும் **4 வகைப்படும்.**

4. எழுத்துக்களை ஒலிக்கும் கால அளவுக்கு **மாத்திரை** என்று பெயர்

5. ‘ஐ’ என்பது தன்னை சுட்டும் போது **இரண்டு மாத்திரை** பெறும்.

6. மொழிக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் குறுக்கம் **ஐகாரக் குறுக்கம்.**

7. ஐம்பது – இச்சொல்லில் ஐகாரம் **ஒன்றரை மாத்திரை** குறைந்து ஒலிக்கிறது.

8. தலைவன் – இச் சொல்லில் ஐகாரம் **ஒரு** மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.

9. கடலை – இச்சொல்லில் ஐகாரம் **ஒரு** மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.

10. ‘ஔ’ என்பது தன்னைச் சுட்டும் போது **இரண்டு மாத்திரை** பெற்று வரும்.

11. சொல்லுக்கு முதலில் மட்டும் வரும் குறுக்கம் **ஔகாரக் குறுக்கம்**

12. ஔவை, வௌவால் – இச்சொற்கள் பெறும் மாத்திரை **ஒன்றரை** ஆகும்.

13. மகரம் தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து **கால் மாத்திரை** அளவில் ஒலிக்கும்.

14. மகர ஈற்றுச் சொல் முன் வகர முதல் மொழி வந்து சேரும் போது நிலைமொழி **மகரம்** குறைந்து ஒலிக்கும்.

15. வரும் வண்டி **மகரக்** குறுக்கம்

16. கல் + தீது = க ஃறீது ஆனது இது எவ்வகைக் குறுக்கம் **ஆய்தக்குறுக்கம்.**

17. குறுக்கங்கள் – ஐகாரக் குறுக்கம், **ஔகாரக்குறுக்கம்,** மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம்; என நால்வகைப்படும்.

18. போன்ம் **மகரக்** குறுக்கம்.

19. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் ஒன்று **திண்ணை.**

20. பல்+தீது என்பது **ப ஃறீது** எனப் புணரும்.

**இயல்: 2**

21. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது **தனிமொழி**

22. தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்**

23. வினைமுற்று **தெரிநிலை, குறிப்பு** என இருவகைப்படும்.

24. ஓர் எச்ச வினை **பெயரைக்** கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.

25. ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது **சொல்** எனப்படும்.

26. மொழி **மூன்று** வகைப்படும்.

27. மொழி தனிமொழி, **தொடர்மொழி**, பொது மொழி என மூன்று வகைப்படும்.

28. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து பொருளை உணர்த்துவது **தொடர்மொழி** எனப்படும்.

29. தனிமொழிக்கும், தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது **பொது மொழி**.

30. அந்தமான் எவ்வகை மொழி **பொதுமொழி**

31. தன் பொருளில் முற்றுப் பெற்று வந்துள்ள வினைச் சொற்களை **வினை முற்றுகள்** என்பர்.

32. வினைமுற்று **எழுவாய்க்குப்** பயனிலையாய் அமையும்.

33. கருத்தா ஒன்றை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினைமுற்று **குறிப்பு வினைமுற்று** எனப்படும்.

34. பெயரெச்சம் **கால வகையால்** மூவகைப்படும்.

35. ஓர் எச்சவினை, வினையைக் கொண்டு முடிந்தால், அது **வினையெச்சம்** எனப்படும்.

36. ஒரு வினைமுற்றுச் சொல், எச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது **முற்றெச்சம்** எனப்படும்.

37. கண்டான் – இவ்வினை முற்றின் பகுதியை எடுத்தெழுது, **காண்** – பகுதி

38. நோக்கி – இச்சொல்லின் பகுதியை எடுத்தெழுது. **நோக்கு** – பகுதி

39. வீழ்ந்தனன் – இச்சொல்லின் பகுதியை எடுத்தெழுது. **வீழ்** – பகுதி

40. பெறு இச்சொல்லை வினையெச்ச சொல்லாக மாற்று **பெற்ற**

41. படித்தான் இச்சொல்லின் வேர்ச்சொல் **படி**

**பொது ஒரு மதிப்பெண் வினாக்கள்**

**இயல்: 3**

1. இளவழகன் வந்தான். இது **வெளிப்படைத்** தொடர்

2. ''மாடு'' என்னும் சொல் **அஃறிணைப் பொது** ஆகும்.

3. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது **பசுவைக்** குறிக்கும்.

4. இருவர் குழந்தை பெற்றனர். இது **குறிப்புச்** சொற்றொடர்.

5. சோறு உண்டான். இது **இனங்குறித்தல்** எனப்படும்.

6. ஒரு சொல் இருமுறை அடுக்கி வந்து ஒலி, ஒளிக் குறிப்புப் பொருள் தருவது **இரட்டைக்கிளவி** எனப்படும்.

7. 'வருக வருக' என்பது **அடுக்குத் தொடர்** ஆகும்.

8. விரைவு, அச்சம், வெகுளி, மகிழ்ச்சி முதலிய பொருள்கள் பற்றி வருவது **அடுக்குத்தொடர்** ஆகும்.

9. ஒரு சொல், தொடரில் முன்னும் பின்னும் வரும் சொற்களின் தொடர்பால் ஒரு பாலை நீக்கி மற்றொரு பாலைச் சுட்டுவது **ஒன்றொழி பொதுச்சொல்** ஆகும்.

10. ஒரு சொல் தன்பொருளையும் குறித்துத் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது **இனங்குறித்தல்** எனப்படும்.

11. இரண்டு முறை மட்டுமே அடுக்கி வருவது **இரட்டைக்கிளவி.**

12. அடுக்கி வரும் சொற்களைப் பிரித்தால் பொருள்தருவது **அடுக்குத்தொடர்** எனப்படும்.

13. கலா, கலகலவெனச் சிரித்தாள் – இதில் ''கல கல'' என்பது **இரட்டைக் கிளவி** ஆகும்.

14. 'வருக வருக' என்பது **மகிழ்ச்சிப்** பொருளில் வந்த அடுக்குத் தொடராகும்.

**இயல்: 4**

1. ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே ஒரு **பொருட்பன்மொழி** என்பர்.

2. 'மீமிசை' என்பது **ஒரு பொருட்பன்மொழிக்குச்** சான்றாகும்.

3. 'இது செய்வாயா ? என்னும் வினாவிற்கு 'வயிறு வலிக்கும்' எனக் கூறுவது **உறுவது கூறல்** விடை.

4. ஆடத் தெரியுமா ? என்னும் வினாவிற்குப் 'பாடத் தெரியும்' எனக் கூறுவது **இனமொழி** விடை.

5. நன்னூல் கிடைக்குமா ? எனக் கடைக்காரரிடம் கேட்பது **கொளல்** வினா.

6. 'இதன் பொருள் யாது ?' என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது **அறிவினா** ஆகும்.

7. இதனைச் செய்வாயா ? எனில் 'நீயே செய்' என்பது **ஏவல் விடை** ஆகும்.

8. வருவாயா ? எனில் 'வாரேன்' என்பது **மறைவிடை**

9. உண்டாயா ? எனில் 'வயிறு வலிக்கும்' என்பது **உறுவது கூறல்** விடை.

10. வினா **6** வகைப்படும்.

11. விடை **8** வகைப்படும்.

12. இறை, செப்பு, பதில் என்பன **விடையின்** வேறு பெயர்கள்.

13. தான் அறியாததை அறிந்து கொள்வதற்காகக் கேட்கப்படும் வினா **அறியாவினா** ஆகும்.

14. அங்கே கிடப்பது பாம்போ ? கயிறோ ? என்பது **ஐய வினா**.

15. ஒரு பொருளைக் கொடுப்பதற்காக வினவுவது **கொடை வினா** ஆகும்.

16. ஒரு தொழிலைச் செய்யும் படி கேட்கும் வினா **ஏவல் வினா** ஆகும்.

17. சுட்டு, மறை, நேர் ஆகிய விடைகள் விடையை **வெளிப்படையாக** உணர்த்துவன ஆகும்.

18. எட்டு விடைவகையுள் **ஐந்து** விடைகள் குறிப்பால் உணர்த்துவன.

19. மதுரைக்கு வழியாது ? என்னும் வினாவிற்குக் கூறும் விடை **சுட்டுவிடை** ஆகும்.

20. எதிர் மறுத்துக் கூறும் விடை **மறை** விடை.

21. உடன்பட்டுக் கூறும் விடை **நேர்விடை** ஆகும்.

22. வினாவையே விடையாகக் கூறுவது **வினா எதிர்வினாதல்** விடை.

23. இதைச் செய்வாயா ? என்ற வினாவிற்கு உடம்பு வலிக்கிறது' என்பது **உற்றது உரைத்தல் விடை**

இயல் 5, 6

1. உவமை, உவமேயம் ஆகிய இரண்டிற்கும் இடையில் வரும் உருபு, **உவம உருபு** எனப்படும்.

2. உவமை, உவமேயம் ஆகிய இரண்டையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது **விரியுவமை.**

3. உவமை, உவமேயம் ஆகிய இரண்டிற்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது **தொகையுவமை** என்பர்.

4. ஒரு பொருளை அதைவிடச் சிறந்த மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது **உவமை** எனப்படும்.

5. விரியுவமை **உவமைத்தொடர்** எனவும் வழங்கப்படும்.

6. தொகையுவமை **உவமைத் தொகை** எனவும் வழங்கப்படும்.

7. மான் **போலும்** மருளும் பார்வை

8. மலர்ப்பாதம் என்ற சொல்லை உருவகமாக மாற்றுக. மலர்ப்பாதம் – **பாதமலர்**.

9. கயல் போன்ற விழி **விரி** உவமை

10. மதிமுகம் **தொகை** உவமை.

11. நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தும் சேர்வது **புணர்ச்சி** எனப்படும்.

12.இரு சொற்கள் சேரும் போது எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகச் சேர்வது **இயல்புப்புணர்ச்சி.**

13. இரு சொற்கள் சேரும் போது தோன்றல், கெடுதல், திரிதல் ஆகிய மாற்றங்கள் ஏற்படுவது **விகாரப்புணர்ச்சி** எனப்படும்.

14. திசைப் பெயர்களோடு திசைப்பெயரும், பிற பெயரும் சேர்வது **திசைப் பெயர்ப் புணர்ச்சி** எனப்படும்.

15. நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியன குறித்து வரும் சொற்கள் **பண்புப் பெயர்கள்** எனப்படும்.

16. செம்மை, சிறுமை, சேய்மை ஆகியன **மையீற்றுப்** பண்புப் பெயர்கள்.

17. மேற்கு + நாடு என்பது **மேனாடு** எனச் சேரும்.

18. கருமை ம+ குழி என்பது **ஈறு போதல்** இனமிகல் என்னும் விதிகளின்படி புணரும்.

19. மரவேர் இச்சொல்லைப் பிரித்து எவ்வகைப் புணர்ச்சி என்று கூறுக. மரம் + வேர் – இது மகர ஈற்றுப் புணர்ச்சி வகையைச் சார்ந்தது.

20. புணர்ச்சி **இரண்டு** வகைப்படும்.

21. பண்புப்பெயர்ப் புணர்ச்சி விதிகள் **ஏழு.**

22. வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும் போது **நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்.**

23. சிற்றோடை **சிறுமை + ஓடை** எனப்பிரியும்.

24. வட்டம் + கல் **வட்டக்கல்** எனப்புணரும்.

**ஒரு மதிப்பெண் வினா – விடை**

**அகப்பொருள்**

**இயல்: 7**

1. பொருளிலக்கணம் **அகம், புறம்** என இருவகைப்படும்.

2. அகத்திணைகள் **ஏழு** வகைப்படும்.

3. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முதலிய ஐந்தும் **அன்பின் ஐந்திணை** எனப்படும்.

4. நிலமும், பொழுதும் **முதற்பொருள்** எனப்படும்.

5. பொழுது **பெரும் பொழுது**, **சிறுபொழுது** என இருவகைப்படும்.

6. மருதத் திணைக்குரிய நிலப்பகுதி **வயலும் வயல் சார்ந்த** பகுதியாகும்.

7. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி **கடலும் கடல்சார்ந்த** பகுதியாகும்.

8. பெரும்பொழுது **ஆறு** வகைப்படும்.

9. முன் பனிக்காலம் **மார்கழி, தை** மாதம் ஆகும்.

10. யாமம் என்பது இரவு 10 மணி முதல் **இரவு 2 மணி** வரை ஆகும்.

11. எற்பாடு **எல்+பாடு** எனப்பிரியும்.

12. ஏற்பாடு பிற்பகல் **2 மணி முதல்**, 6 மணி வரை ஆகும்.

13. மருதம், நெய்தல் ஆகிய இரண்டிற்கும் **ஆறு பெரும் பொழுதுகளும்** வரும்.

14. வருணன் **நெய்தல்** நிலத்திற்குரிய தெய்வம்.

15. அருவிநீர், சுனைநீர் ஆகிய இரண்டும் **குறிஞ்சி** திணைக்குரிய நீராகும்.

16. பாலை நிலத்திற்குரிய தெய்வம் **கொற்றவை**.

17. முல்லைத் திணைக்குரிய தொழில் **ஏறுதழுவுதல்**, **நிரை மேய்த்தல்** ஆகும்.

18. மருத நிலத்திற்குரிய பறவைகள் **நாரை, நீர்க்கோழி, அன்னம்** ஆகும்.

19. பாலை நிலத்திற்குரிய பண் **பஞ்சுரம்** ஆகும்.

20. நெய்தல் நிலத்திற்குரிய மரம் **புன்னை, ஞாழல்** ஆகும்.

21. முல்லை நிலத்திற்குரிய விலங்கு **முயல், மான், புலி** ஆகும்.

22. ஐப்பசி, கார்த்திகை ஆகிய இரு திங்களும் **குளிர்காலத்திற்கு** உரியன.

23. வைகறைக்குரிய கால அளவு இரவு **2 மணி முதல் காலை 6 மணி வரை**.

24. மணமுழா, நெல்லரி கிணை ஆகிய இரண்டும் **மருதத்** திணைக்குரிய பறைகள்.

25. குரவம், பாதிரி ஆகிய இரண்டும் **பாலைத்** திணைக்குரிய பூக்கள்.

## புறப்பொருள்

**இயல்: 8**

1. புறத்திணைகள் **பன்னிரெண்டு** வகைப்படும்.

2. ஆநிரை கவர்தல் **வெட்சித்திணை** ஆகும்.

3. மதிலைக்கைப்பற்றுதல் **உழிஞைத் திணை** ஆகும்.

4. பாடாண் திணை என்பது **ஆண்மகனின் ஒழுகலாறுகள்** கூறுவது.

5. பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தம் வீரர்களுடன் போரிடுவது **தும்பைத் திணை** ஆகும்.

6. கைக்கிளை என்பது **ஒருதலைக்காமம்**.

7. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது **காஞ்சித்திணை** ஆகும்.

8. பெருந்திணை என்பது **பொருந்தாக்காமம்**.

9. பகையரசனால் முற்றைகையிடப்பட்ட தம் மதிலைக்காத்தல் **நொச்சித்திணை** ஆகும்.

10. மதில்போர் பற்றிய புறத்திணைகள் **நொச்சித்திணை உழிஞைத்திணை** ஆகும்.

**பாவகைகள்**

**இயல்: 9**

1. ‘உலகு’ என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச்சீராயின் அதன் வாய்ப்பாடு **பிறப்பு** ஆகும்.

2. ‘நல்லவை’ இச்சொல்லை அலகிட்டால் **நேர் + நிரை** எனப் பிரியும்.

3. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி **முச்சீராய்** வரும்.

4. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் **ஏகாரத்தில்** முடிவது சிறப்பு.

5. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று பல விகற்பத்தான் வருவது **இன்னிசை வெண்பா** ஆகும்.

6. வெண்பாவின் ஓசை **செப்பலோசை** ஆகும்.

7. ஆசிரியப்பாவின் வேறு பெயர் **அகவற்பா** ஆகும்.

8. ஆசிரியப்பாவின் ஓசை **அகவல்** ஆகும்.

9. பா **நான்கு** வகைப்படும்.

10. வெண்பாவின் ஈற்றடி **மூன்று** சீர்களாய் வரும்.

11. மாமுன் நிரை, விளம் முன் நேர் வரும் தளை **இயற்சீர் வெண்டளை** ஆகும்.

12. காய் முன் நேர் வருவது **வெண்சீர் வெண்டளை** ஆகும்.

13. ஐந்தடி முதல் பன்னிரெண்டு அடிவரை பெற்று வருவது **ப ஃறொடை வெண்பா** ஆகும்.

14. அளவடிகளைப் பெற்று வருவது **ஆசிரியப்பா** ஆகும்.

15. புலவனின் மனக்கருத்திற்கேற்பப் பல அடிகளைப் பெற்று வருவது **ஆசிரியப்பா** எனப்படும்.

16. அடிகளை முன் பின்னாக மாற்றினாலும் பாடலின் ஓசையும் பொருளும் மாறாமல் வருவது **அடிமறி மண்டில ஆசிரியப்பா**.

17. நிலைமண்டில ஆசிரியப்பாவில் எல்லா அடிகளும் **நான்கு** சீர்களாய் வரும்.

18. இரண்டு சீர்களைப் பெற்று வருவது **குறளடி** ஆகும்.

19. சிந்தடி **மூன்று** சீர்களாக வரும்.

20. அளவடி **நான்கு** சீர்களைப் பெற்று வரும்.

## அணி

**இயல்: 10**

1. அணி என்னும் சொல்லுக்கு **<u>அழகு</u>** என்பது பொருள்.
2. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது, **<u>தற்குறிப்பேற்ற அணி</u>**.
3. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் **<u>வஞ்சப்புகழ்ச்சி அணி</u>** எனப்படும்.
4. ஒரு சொல் இருபொருள்பட அமைந்து வருதல் **<u>இரட்டுறமொழிதல் அணி</u>** எனப்படும்.
5. இரட்டுறமொழிதல் அணியை **<u>சிலேடை அணி</u>** எனவும் வழங்குவர்.
6. இரட்டுறமொழிதல் அணி **<u>இரு</u>** வகைப்படும்.
7. ஒரு செய்யுளில் ஒரு சொல் பிரிவுபடாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவது **<u>செம்மொழிச் சிலேடை அணி</u>** எனப்படும்.
8. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அதுவே பிரிந்து நின்று வேறொரு பொருளையும் தருமாறு அமைத்துப் பாடுவது **<u>பிரிமொழிச் சிலேடை அணி</u>** ஆகும்.
9. செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது **<u>சொல் பின்வருநிலை அணி</u>** எனப்படும்.
10. செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது **<u>பொருள் பின்வருநிலை</u>** அணி.
11. செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது **<u>சொற்பொருள் பின்வருநிலை</u>** அணி.
12. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது **<u>பிறிது மொழிதல் அணி</u>** ஆகும்.

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.

1. இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது.
   இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்த**<u>ன</u>**.

2. புலவர்கள் பொங்கட் புதுநாட்களின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினர்.
   புலவர்கள் பொங்கட் புதுநாட்களின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினார்**<u>கள்</u>**.

3. மேடைப் பேச்சுகு கருத்துகளே உயிர் நாடி போன்றது.
   மேடைப் பேச்சுகு கருத்துகளே உயிர் நாடி போன்ற**<u>ன</u>**.

4. ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிப்பு முறையைக் கண்டுபிடித்தனர்.
   ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிப்பு முறையைக் கண்டுபிடித்**<u>தார்</u>**.

5. இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.
   இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்ற**<u>ன</u>**.

6. காவிரிப் பூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக் கிடந்தது.
   காவிரிப் பூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக் கிடந்த**<u>ன</u>**.

7. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.
   தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்த**<u>து</u>**.

8. ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.
   ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்**<u>தாள்</u>**.

9. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா.
   மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா**<u>து</u>**.

10. பெண்கள் எல்லாத் துறைகளிலும் பணிபுரிகின்றாள்.
    பெண்கள் எல்லாத் துறைகளிலும் பணிபுரிகின்ற**<u>னர்</u>**.

**16. கீழ்க்காணும் தொடரில் சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.**

1. ஆண்களை போலவே பெண்களுக்கும் அரசு பணி அனைத்து துறைகளிலும் கொடுக்க வேண்டும்.
   ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அரசுப் பணி அனைத்துத் துறைகளிலும் கொடுக்க வேண்டும்.

2. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமாம்.
   ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமாம்.

3. மேடை பேச்சு மிகுந்த பயனை தரவல்லது.
   மேடை பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது.

4. மக்களை இலட்சிய பார்வையிலே அழைத்து செல்லும் வன்மையுடையதே மேடை பேச்சு
   மக்களை இலட்சியப் பார்வையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையதே மேடை பேச்சு

5. திரைபடம் எடுக்க பயன்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
   திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.

6. திரைபடம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டி போடவல்லது.
   திரைப்படம் மக்களைத் தன்பால் ஈர்த்துக் கட்டிப் போடவல்லது.

7. மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ் மொழி விளங்குகிறது.
   மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ் மொழி விளங்குகிறது.

8. தமிழில் வரலாற்று கருத்துகளையும், பண்பாட்டு கூறுகளையும் காணமுடியும்.
   தமிழில் வரலாற்றுக் கருத்துகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் காணமுடியும்.

9. அறிவு ஒளி பெற அங்கே சோதி தரிசன புதுமையை புகுத்தினார்.
   அறிவு ஒளி பெற அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார்.

10. பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டும் எனவும், கடல் கடந்து செல்ல கூடா தெனவும் கூறி வந்தனர்.
    பெண்கள் குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்த வேண்டும் எனவும், கடல் கடந்து செல்லத் கூடா தெனவும் கூறி வந்தனர்.

**பகுதி – அ**

17. கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள பிற மொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல் எழுதுக.

| பிறமொழிச் சொல் | | தமிழ்ச் சொல் |
|---|---|---|
| அங்கத்தினர் | – | உறுப்பினர் |
| அதிகாரி | – | அலுவலர் |
| அதிபர் | – | தலைவர் |
| அந்நியர் | – | அயலார் |
| அபிஷேகம் | – | நீராட்டு |
| அபூர்வம் | – | புதுமை |
| அலங்காரம் | – | ஒப்பனை |
| அனுமதி | – | இசைவு |
| ஆபத்து | – | இடம் |
| ஆராதனை | – | வழிபாடு |
| ஆசிர்வாதம் | – | வாழ்த்து |
| இலஞ்சம் | – | கையூட்டு |
| இலாபம் | – | வருவாய் |
| உத்தரவு | – | ஆணை |

| | | |
|---|---|---|
| உத்தியோகம் | – | பணி |
| உபயோகம் | – | பயன் |
| கிராமம் | – | சிற்றூர் |
| குமாரன் | – | மகன் |
| சாவி | – | திறவுகோல் |
| நஷ்டம் | – | இழப்பு |
| நாஷ்டா | – | சிற்றுண்டி |
| பஜனை | – | கூட்டு வழிபாடு |
| கஜானா | – | கருவூலம் |
| விஞ்ஞானம் | – | அறிவியல் |
| ஜனங்கள் | – | மக்கள் |
| நிபுணர் | – | வல்லுநர் |
| ஆஸ்பிட்டல் | – | மருத்துவமனை |
| டீ ஸ்டால் | – | தேநீர்க்கடை |
| பஸ் ஸ்டாண்ட் | – | பேருந்து நிலையம் |
| போஸ்ட் ஆபிஸ் | – | அஞ்சலகம். |

**18. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச்சொற்களை நீக்கி எழுதுக.**

1. வேர்வை சிந்த உளைக்க வேண்டும்.

   **விடை:** வியர்வை சிந்த உழைக்க வேண்டும்

2. அவன் வேப்பிலை பறித்தான்

   **விடை:** அவன் வேப்பந்தழை பறித்தான்

3. தம்பி இங்கிட்டு வா

   **விடை:** தம்பி இங்கு வா

4. என் உசிர் நீ தானே!

   **விடை:** என் உயிர் நீ தானே

5. வலது பக்கம் சுவறில் எழுதாதே

   **விடை:** வலப்பக்கச் சுவரில் எழுதாதே.

19. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தக் குறியிட்டு எழுதுக.

பாடப்புத்தகம் – பக். 192, 193 – ஆம் பகுதியில் உள்ள செயல்பாடுகளை முழுமையாக பயிற்சி அளிக்க

**பகுதி – அ**

20. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை அறிக.

**ஒலி மரபு**

| | |
|---|---|
| ஆடு கத்தும் | ஆந்தை அலறும் |
| எருது எக்காளமிடும் | காகம் கரையும் |
| குதிரை கணைக்கும் | கிளி பேசும் |
| குரங்கு அலப்பும் | குயில் கூவும் |
| சிங்கம் முழங்கும் | கூகை குழறும் |
| நரி ஊளையிடும் | கோழி கொக்கரிக்கும் |
| புலி உறுமும் | சேவல் கூவும் |
| பூனை சிறும் | புறா குனுகும் |
| யானை பிளிறும் | மயில் அகவும் |
| எலி கீச்சிடும் | வண்டு முரலும் |

**வினை மரபு**

| | |
|---|---|
| அம்பு எய்தார் | சோறு உண்டான் |

ஆடை நெய்தார் தண்ணீர் குடித்தான்
உமி கருக்கினாள் பால் பருகினாள்
ஓவியம் புனைந்தான் பூப் பறித்தாள்
கூடை முடைந்தார் மரம் வெட்டினான்
சுவர் எழுப்பினான் மாத்திரை விழுங்கினான்
செய்யுள் இயற்றினான் முறுக்குத் தின்றான்.

**பகுதி – அ**

**ஆ. இலக்கண வினாக்கள்**

1. ஐகாரக் குறுக்கம் – விளக்குக.

மொழிக்கு முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்திலும் வரும் ஐகாரம் தன் மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பது ஐகாரக் குறுக்கம் எனப்படும்.

**ஐ**ப்பசி – மொழி முதல் ( 1 1/2 மாத்திரை)

அ**லை**கள் – மொழி இடை (1 மாத்திரை)

க**லை** – மொழி இறுதி (1 மாத்திரை)

2. ஔகாரக் குறுக்கம் – விளக்குக.

மொழிக்கு முதலில் வரும் ஔகாரம் இரண்டு மாத்திரை அளவிலிருந்து 1 1/2 மாத்திரையாகக் குறைந்து ஒலிப்பது – ஔகாரக் குறுக்கம் எனப்படும்.

**கௌ**தமர் – ( 1 1/2 மாத்திரை)

3. பொதுமொழி – விளக்கு

ஒரு சொல் தனிமொழியாகவும், அதுவே பிரிந்து நின்று தொடர் மொழியாகவும் பொருள் தருவது பொது மொழி எனப்படும்.

பலகை – மரப்பலகை (தனிமொழி)

பல + கை – பல கைகள் (தொடர் மொழி)

4. சொல்லின் வகைகள் யாவை ?

1. தனிமொழி 2. தொடர்மொழி 3. பொது மொழி

5. முற்றெச்சம் என்றால் என்ன ?

ஒரு வினைமுற்று எச்சப் பொருளைத் தந்து, மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

(எ.கா) உண்டான் வந்தான்.

6. அடுக்குத்தொடருக்கும், இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடு யாவை ?

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| 1. இரண்டு முதல் நான்கு முறை அடுக்கி வரும் | இரட்டைச் சொல்லாக மட்டுமே வரும் |
| 2. பிரித்தால் பொருள் தரும் | பிரித்தால் பொருள் தராது. |

7. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

வினா ஆறு வகைப்படும், அறிவினா, அறியாவினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா.

8. பாம்போ, கயிறோ ? – எவ்வகை வினா ?

ஐயவினா

9. அடைப்புகுறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1. மலர்ப்பாதம் (உருவகம்)
2. விழிக்கயல் (உவமை)

1. பாதமலர் 2. கயல்விழி

10. வடக்கு என்னும் திசைப்பெயருடன் பிற திசைகள் சேரின் எவ்வாறு புணரும் ?

வடக்கு என்னும் சொல்லின் ஈற்றெழுத்தும், ககர ஒற்றும் கெட்டுப் புணரும்.

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு

11. மரவேர் – சொல்லைப் பிரித்துப் புணர்ச்சி கூறுக

மரம் + வேர் = மரவேர்

1. மகர ஈறு கெட்டுப் புணரும்

12. முதற்பொருள் என்பது யாது ?

ஒவ்வொரு திணைக்குறிய நிலமும், பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

13. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.

| | | |
|---|---|---|
| தெய்வம் | – | திருமால் |
| மக்கள் | – | ஆயர், ஆய்ச்சியர் |
| உணவு | – | வரகு, சாமை |
| பூ | – | முல்லை, தோன்றி |

14. புறத்திணை என்பது யாது ?

வாழ்க்கைக்குத் துணைபுரியும் கல்வி, செல்வம், அரசியல் முதலிய பொருள்களைப் பற்றிக் கூறுவது புறத்திணை எனப்படும்.

15. வாகைத்திணை என்பது யாது ?

வெற்றி பெற்ற மன்னனும், வீரர்களும் வாகைப் பூவைச் சூடி மகிழ்வது வாகைத்திணை.

16. வெண்பாவின் வகைகள் யாவை ?

குறள் வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா.

17. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்கு.

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

''தையல் துயர்க்குத் தரியாது தம் சிறகாம்
கூவினவே கோழிக் குலம்''

கோழிகள் விடியற்காலையில் கூவுதல் இயல்பான நிகழ்ச்சி. ஆனால், கவிஞர் காட்டில் நள்ளிரவில் கணவனைப் பிரிந்து வருத்தமுற்ற தமயந்தியின் துயரைப் போக்க, இருளை நீக்குவதற்குத் தேரேறி வரைந்து வருமாறு ஞாயிற்றைக் கோழிக்கூட்டங்கள் கூவி அழைப்பதாகத் தன் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார். எனவே, இது தற்குறிப்பேற்ற அணியாயிற்று.

18. கீழ்க்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்ப்பாடு கூறுக.

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அற / னீ / னும் | – | நிரை நேர் நேர் | = புளிமாங்காய் |
| 2. | இன் / பமும் | – | நேர் நிரை | = கூவிளம் |
| 3. | ஈ / னும் | – | நேர் நேர் | = தேமா |
| 4. | திற / னறிந் / து | – | நிரை நிரை நேர் | = கருவிளங்காய் |
| 5. | தீ / தின் / றி | – | நேர் நேர் நேர் | = தேமாங்காய் |
| 6. | வந் / த | – | நேர் நேர் | = தேமா |
| 7. | பொருள் | – | நிரை | = மலர் |

<u>பகுதி – ஆ</u>

<u>துணைப்பாடம்</u>

**அ) எவையேனும் நான்கனுக்கும் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க**

1. பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தும் அவர்தம் செயல்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

2. மனைவியுடன் வீடு திரும்பிய கமலநாதன், வழியில் மறக்காமல் நாலு முழம் மல்லிகைப் பூவை வாங்கி வந்தார்.

வீடு வந்ததும், முதல் வேலையாக மனைவியிடம் பூவைக் கொடுத்தவர் கண்கள் கலங்கின. ''கோகிலா! பூவைத் தலைநிறைய வச்சுக்கொள். எப்பவும் பொட்டும் பூவுமா, சந்தோஷமா நீ இருக்கனும்'' என்றார். கோகிலா திகைப்புடன் கணவனைப் பார்த்தாள்.

அ) கமலநாதனின் கண்கள் கலங்கக் காரணமென்ன ?

3. அன்றாட வாழ்வில் பயன்படும் ஏதேனும் ஐந்து சட்டங்களைக் குறித்து எழுதுக.

4. அண்ணா எழுதிய கடிதத்தில் இடம் பெறும் கருத்துகள் நான்கனை எழுதுக.

5. எம்.ஜி.இராமச்சந்திரன் பற்றிக் குறிப்பு எழுதுக.

6. அகழாய்வு மேற்கொள்ளும் பொழுது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவை ?

7. ''என்னடியம்மா இந்தக் குட்டியெல்லாம் இப்படி கத்துதே, கவனிக்கக் கூடாதா, பாவம்? என்றாள் கிழவி.

''அந்த நாய் காலையிலே போனது இன்னும் வரவில்லை அத்தை. பால் இல்லாமல் குட்டி எல்லாம் கத்துது'' என்றாள் மருமகள்.

அ) குறட்டை ஒலி என்னும் இக்கதையில் இடம்பெறும் மருமகளின் கருணை உள்ளத்தை எடுத்துக்காட்டுக.

8. ''இவ்வளவு சிரமங்களை நீ தாங்கிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறதே; இது மிகவும் அநியாயம் என்று உனக்குத் தோன்றுவதில்லையா ? இலிண்ட்கிரென்''

''இல்லை'', அவர் குரல் திடமாக ஒலித்தது.

அ) இலிண்ட் கிரென் தன்னம்பிக்கையை விளக்கி எழுதுக.

9. அயோத்திதாசர் ஆற்றிய சமூகப் பணி குறித்து எழுதுக.

10. நூலகத்தின் பயன்பாடும் நன்மைகளும் குறித்து எழுதுக.

32. கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் விரிவான கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்றும் தருக.

**நீரின்றி இயங்காது உலகம் – நீர் நிலைகள் அடிப்படை – நீர்ப்பற்றாக் குறை ஏற்படக் காரணம் – நீரைச் சேமிக்கும் வழிகள் – மழை நீரைச் சேமித்தல் – நிலத்தடி நீரைச் சேமித்தல் வழி முறைகள் – மரம் வளர்ப்போம் – மழை பெறுவோம்.**

**மழை நீர் சேகரிப்பு**

நீரின்றி இவ்வுலகில் எந்த ஓர் உயிரினமும் வாழ முடியாது. அதனால் தான் வள்ளுவரும் ''நீரின்றி அமையாது உலகு'' என்றார். நீருக்கு அடிப்படை மழையாகும். பெய்கின்ற மழைநீரை ஏரி, குளம் போன்றவற்றில் தேக்கி வைப்பதன் மூலம் நிலத்தடி நீர் குறையாமல் இருப்பதுடன் குடிப்பதற்கும், விவசாயத்திற்கும் பயன்பட உதவுகிறது.

இப்பொழுதெல்லாம் மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்வதில்லை. பெய்கின்ற மழையின் அளவும் குறைந்து கொண்டே வருகின்றது. முன்பெல்லாம் மண் தரை அதிகமாய் இருந்தது. மழை நீரை தரை உறிஞ்சிச் சேமித்துக் கொள்ளும். எந்த இடத்தில் தோண்டினாலும் நீர் ஊறும் – இப்பொழுது கிணறுகளும், ஆழ்குழாய்களும் பெருகி விட்டன. இதனால் நீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது.

மொட்டை மாடியில் பெய்யும் மழை நீரைக் குழாய் மூலம் கீழே கொண்டு வந்து தொட்டியில் சேமிக்க வேண்டும். திறந்த வெளிக்கிணறுகள் இல்லாத இடங்களில் தேங்கும் நீரைக் குழாய்க் கிணறு தோண்டி அதன் மூலம் நிலத்தடியில் சேர்க்கலாம்.

மழை பெய்யும் காலத்தில் அம்மழை நீர் வீணாக்கி விடாமல் நிலத்துக்கடியில் செலுத்திச் சேகரிப்பதே மழைநீர் சேகரித்தல் ஆகும். மழைநீரைக் குளங்கள் அல்லது ஏரிகள் உள்ள பகுதிகளுக்கு நீரோடை மூலமாகத் திருப்பி மழைநீரைச் சேமிக்க இயலும். இத்தகைய

குளங்களின் மூலமாகச் சுற்று வட்டாரத்தில் உள்ள நிலத்தடி நீர் மட்டத்தைப் பெருமளவு உயர்த்த முடியும்.

காடுகள் அழிக்கப்படுவதால் பெருமளவு மரங்கள் அழிக்கப்படுகின்றன. மரங்கள் அழிக்கப்படுவதால் மழை பெய்ய வாய்ப்பு இல்லாமல் போகிறது. எனவே, நாம் இயற்கை தந்த கொடையாம் மரங்களை அழிக்காமல் காப்பதோடு ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மரமாவது வளர்ப்போம்! மழை வளம் பெறுவோம்!.

வினாக்கள்

1. செய்தித்தாள் – செய்தித்தாளின் வகைகள் – செய்தித்தாள்களின் பயன்கள் – செய்திகள் சேகரித்தல் – செய்திகளை அச்சிடுதல் – செய்தித்தாள்களை வெளியிடுதல்.
2. தாய்மொழி – தாய் மொழிக்கல்வி – தாய்மொழி வழிக் கல்வியின் சிறப்பு – தாய்மொழி வழிக்கல்வியின் பயன்கள் – அயல் நாடுகளில் தாய்மொழி வழிக் கல்வி – தாய் மொழிக் கல்வி வளர வழிகள் மாணவரின் பங்கு.
3. கல்வி – கல்வியின் சிறப்பு – கற்றவர் சிறப்பு – கல்லாதவர் இழிவு – கல்வியின் பயன்கள் – சங்க காலக் கல்வி – சங்க காலப் புலவர்கள் – சங்க இலக்கியங்கள்.
4. தகவல் தொடர்பு – கணினியின் செயல்பாடு – கணினியின் இன்றைய தேவை – இணையதளம் – இணையத்தின் பயன்கள் – அலைபேசி – தொலைக்காட்சி – வானொலி – செய்தித்தாள்கள்.
5. சிக்கனம் – சேமிப்பு – சேமிப்பின் தேவை – செல்வமும் சிக்கனமும் – மாணவரும், சிறு சேமிப்பும் – சிக்கனத்தின் சிறப்பு – சேமிப்புத் திட்டங்கள் – சேமிப்பின் பயன்கள்.

**<u>33. நண்பர், பெற்றோர், உறவினர் இவர்களுக்கு எழுதும் முறை</u>**

கடிதத்தின் தலைப்பு

இடம்:
நாள்:

அன்புள்ள –

1. நலம் விசாரித்தல்
2. கடிதம் எழுதப்படும் காரணத்திற்கான விளக்கம் அதன் பின்னர் வேண்டுதல் அல்லது விருப்பம்.

தங்கள் அன்புள்ள,

உறையின் மேல் முகவரி

நண்பர் / பெற்றோர் / உறவினர் பெயர் /
வீட்டு எண், தெருப்பெயர்
ஊர்.

**<u>2. அலுவலகக் கடிதம்</u>**

**புகார் கடிதம், வேண்டுகோள் விண்ணப்பம் எழுதும் முறை**

கடிதத்தின் தலைப்பு

அனுப்புதல்
XXXXXXXXX
XXXXXXXX
ஊர்.

பெறுதல்
XXXXXXXX
அலுவலகத்தின் பெயர்,
ஊர்.

ஐயா / அம்மையீர் /

பொருள்: கடிதம் எழுதப்படும் காரணத்தை எழுத வேண்டும்.

1. கடிதம் எழுதப்படும் நோக்கம்
2. அக்குறைகளால் மக்களுக்கு ஏற்படும் துன்பம்
3. குறைபாடு நீக்கப்பட்டால் மக்களுக்கு ஏற்படும் நன்மை.
4. குறைகளைப் போக்குமாறு வேண்டுகோள் விடுத்தல்.

இடம்:
நாள்:

தங்கள் உண்மையுள்ள

உறையின் மேல் முகவரி
பெறுதல் முகவரியைத் திரும்ப எழுதுதல் வேண்டும்.

இது போன்று பயிற்சி செய்தல் வேண்டும். பாடநூலில் உள்ள கடிதங்களைப் பயிற்சி செய்தல் வேண்டும்.

**புகார் செய்தல்**

1. இரு சக்கர வாகனம் காணாமல் போனதை மீட்டுத் தர வேண்டி விண்ணப்பம்.
2. வீட்டில் களவு போன பொருள்களை மீட்டுத் தர வேண்டி விண்ணப்பம்.
3. சுற்றுச் சூழல் பாதுகாப்பு வேண்டி கடிதம்.

**கூட்டு விண்ணப்பம்**

1. பேருந்து வசதி வேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு விண்ணப்பம்.
2. குடிநீர் வசதி வேண்டி விண்ணப்பம்.
3. மின் விளக்கு வசதி வேண்டி விண்ணப்பம்.
4. நூலகம் அமைக்க வேண்டி விண்ணப்பம்.
5. மருத்துவமனை அமைக்க வேண்டி விண்ணப்பம்.

**தன் விவரக் குறிப்பு எழுதுதல்**

அனுப்புதல்

XXXXXXXXX
வீட்டு எண், தெரு பெயர்
ஊர்.

பெறுதல்

XXXXXXXX
அலுவலகத்தின் பெயர்,
ஊர்.

ஐயா / அம்மையீர் /

வணக்கம்

பொருள்: கடிதத்தில் எழுதப்படும் காரணத்தை எழுத வேண்டும்.

வேலை வாய்ப்புக்கான விண்ணப்பம் நிரப்புதல்

தன் விவரக் குறிப்பு

1. பெயர் –
2. பிறந்த நாள் மற்றும் வயது –
3. பாலினம் –
4. தந்தையின் பெயர் –
5. முகவரி –
6. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் –
7. தாய் மொழி –
8. அறிந்த மொழிகள் –
9. தட்டச்சுப் பயிற்சி நிலை –
10. கணினிப் பயிற்சி நிலை –
11. அலைபேசி எண் –
12. மின்னஞ்சல் முகவரி –

**பயிற்சி வினா**

அலுவலக உதவியாளராகப் பணிபுரிய பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதி வாய்ந்தவர்கள் தன் விவரக் குறிப்பைக் கீழ்க்காணும் முகவரிக்குப் பத்து நாளுக்குள் அனுப்புக.

கலைவாணி கல்வி நிலையம், தல்லாகுளம், மதுரை மாவட்டம் – 02.

**34.** கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து, பொருத்தமான தலைப்புத் தருக.

வினா: கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தங்கள் கூடுகளை விட்டுப் பறக்கத் தொடங்கின. அந்தக்காலை வேளையில் வானில் திடீரென்று ஓர் ஒளி தோன்றியது அப்போது ––––

காலை புலர்ந்தது.

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தங்கள் கூடுகளை விட்டுப் பறக்கத் தொடங்கின. அந்தக் காலை வேளையில் வானில் திடீரென்று ஓர் ஒளி தோன்றியது அப்போது பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்குத் தயாராகிக் கொண்டிருந்த மாணவன் கிருஷ்ணன் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தான். அச்சமயம் வானில் தோன்றிய ஒளியைக் கண்ட கிருஷ்ணன், அதனைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான்.

அறிவியல் ஆசிரியை கூறியதை நினைவு கூர்ந்தான். நீர் திவலைகள் ஒன்று சேர்ந்த கருமேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதும் பொழுது ஏற்படும் ஒளியே மின்னல் என்பதை உணர்ந்தான். மேலும் மழை வருகின்ற சமயத்தில் மட்டுமே மின்னல் தோன்றும் என்று அவன் எண்ணினான். ஆனால் அன்று மழை வரவில்லை.

அவன் தன் ஐயப்பாட்டை தன் தந்தையிடம் வினவினான். அதற்கு அவனது தந்தை, வானில் நிகழும் இயற்கை மாற்றங்களைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார். மேலும் தற்போது உலகளவில் பேசப்படும் மிகப்பெரிய பிரச்சனையாகிய புவி வெப்பமடைவதால் நீர் நிலைகள் வறண்டு புவி மாசடைந்து காணப்படுகின்றது.

இதனால், தூசுகள் சூழ்ந்து மேகம் கருவுற்றது போல் காணப்பட்டாலும் மழை வருவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாமல் போகின்றது. இச்சமயங்களில் தோன்றும் மின்னலே இப்பொழுது நீ கண்டது என்பதனையும் எடுத்துக் கூறினார்.

அத்தோடு புவியைப் எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றியும் கூறி வருங்கால இளைஞர்களின் தலையாய கடமை என்பதனையும் உணர்த்தினார்.

வினா

1. மணிகண்டன் வேகமாக ஓடி வந்தான். அவனைப் பார்த்ததும் விசாலாட்சி ஏன்டா இப்படி ஓடி வருகிறாய்? என்று கேட்டாள். அக்கா அவனைப்பார், என்னைத் துரத்திக் கொண்டு வருகிறான் என்றான். விசாலாட்சி தன் தம்பி கை காட்டிய திசையை உற்றுப் பார்த்தாள் அப்போது –––
2. செங்குட்டுவன் வீட்டில் ஒரு பசு இருந்தது. அதைத் தினமும் பால் கறக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்வார் செங்குட்டுவனின் தந்தை. பால் நிலையத்தில் பசுவின் பாலைக் கறந்ததும் வீட்டிற்கு அதை ஓட்டுவார். பசு வீடு வந்து சேரும். அப்பொழுது செங்குட்டுவன்.
3. பாண்டியன் உடல் ஊனமுற்றவன். கால் குறைபாடு உடையவன். நொண்டி நொண்டி நடப்பான். இவன் மீது சீர்காழிக்கு அன்பும் அதிகம். எங்குச் சென்றாலும் இருவரும் சென்றாகவே செல்வர். ஒரு நாள் இருவரும் பாதையைக் கடக்கும் போது –––

**35.** கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளில் கவிதை ஒன்று எழுதுக.

மழை

வையத்தை வாழ வைப்பாள்
வாட்டத்தைப் போக்கிடுவாள்
ஊழியாகி ஒறுத்திடுவாள்
உன் மத்தம் காட்டிடுவாள்
தாயாயும் கனிந்து நிற்பாள்
தனதானியம் ஏந்தி நிர்பாள்
தரித்திரம் விரட்டிடுவாள்
நிகரொன்றும் இல்லாதாள்
அவளைத் தலை தாழ்ந்து வணங்கிடுவோம்.
அவள் கருணையாலே ஓங்கிடுவோம்!

பள்ளி

பள்ளி என்ற கலைக்கூடம் – நம்
வாழ்வைச் சிறப்பிக்கும் அன்றாடம்
சிலையாய் நம்மைச் செதுக்கும் – நல்ல
கலையாய் நம்மை ஆக்கும்.
கேள்வி கேட்கும் ஞானம் – அங்குப்
பதிலைக் கொடுக்கத் தோன்றும்
வேற்றுமை அகற்றும் பண்டம் – நம்
ஒற்றுமை ஒன்றே சொந்தம்

பயிற்சிகள்

1. நல்ல நண்பன்
2. மரம் வளர்ப்போம்
3. வெண்ணிலவு
4. தென்றல் காற்று
5. கடல்
6. இசையின்பம்
7. அதிகாலைப் பொழுது
8. எதிர் கால இந்தியா
9. மின்சாரம்
10. மனித நேயம்

**36. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களையும் எடுத்தெழுதுக.**

மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டின்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.

**திரண்ட கருத்து**

இப்பாடல் பாரதிதாசனின் “புத்தகசாலை என்ற கவிதையில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

மக்களிடம் அன்புநெறி வளர வேண்டும். பரந்த எண்ணம் அவர்களிடம் ஏற்பட வேண்டும். சுயநலம் என்னும் இருளை அவர்களிடம் இருந்து அகற்ற வேண்டும். உலக மக்கள் யாவரும் ஓரினத்தவர் என்று உணர வேண்டும்.

இனிதினிதாய் தோன்றிய நல்ல எண்ணங்கள் எல்லாம் விளங்குவது புலவர்தம் கொடையாகிய புத்தகசாலையில் அன்றோ! மக்கள் எல்லா நலமும் அடைந்து புத்தம் புது வாழ்வு பெற வேண்டுமானால் நாட்டில் புத்தக சாலை அவசியம் ஏற்பட வேண்டும்.

**பொருள் நயம்**

மக்களிடம் அன்பு பெருக, சுயநலம் ஒழிய, ஓரினம் என்ற ஒற்றுமை நீங்க, புதுவாழ்வு காண புத்தக சாலையின் தேவையை பாரதிதாசன் இங்கு எடுத்துரைக்கின்றார்.

**அணி நயம்**

மக்களிடம் வானத்தைப் போல பரந்த எண்ணம் உருவாக வேண்டும் என்று கூறுவதன் மூலம் இப்பாடலில் உவமையணி பயின்று வந்துள்ளது.

**மோனை**

செய்யுளில் முதலெழுத்து ஒன்று போல் வரத்தொடுப்பது மோனை எனப்படும். ஆசிரியர் மேற்கண்ட பாடலில் கீழ்க்கண்ட மோனைச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

**மு**னிதரெலாம், **ம**னோபாவம், **இ**னிதினிதாய், **இ**லகுவது

**எதுகை**

செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரத்தொடுப்பது எதுகை எனப்படும். ஆசிரியர் மேற்கண்ட பாடலில் கீழ்க்கண்ட எதுகைச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

ம**னித**ரெலாம், த**னி**மனித, இ**னி**தினிதாய், பு**னித**முற்று

37. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

தமிழர், தாம் வாழும் இடங்களை நிலத்தின் தன்மைக்கேற்பப் பாகுபடுத்தி உள்ளனர். அவையே ஐவகை நிலங்கள், மேலும் செம்மண், களர்நிலம், உவர் நிலம் என்றும் பகுத்துள்ளனர். நிறத்தின் அடிப்படையில் செம்மண் நிலமென்றும், சுவையின் அடிப்படையில் உவர்நிலம் என்றும், தன்மையின் அடிப்படையில் களர்நிலம் என்றும் நிலத்தைத் தமிழர் வகைப்படுத்தினர்.

தமிழர், செம்மண் நிலத்தை அதன் பயன்கருதிப் போற்றினர், இதனைச் செம்புலப் பெயல் நீர் போல என்னும் குறுந்தொகை வரி உணர்த்தும். உவர் நிலம், மிகுந்த நீரைப் பெற்றிருந்தும் பயன்தருவதில்லை. இதனை, அகல்வயல் பொழிந்தும் உறுமிடத்துதவா உவர் நிலம் என்னும் புறநானூற்று வரிகள் புலப்படுத்துகின்றன. எதற்கும் பயன்படாத நிலம் களர்நிலம், இதனைப் பயவாக் களரனையர் கல்லாதவர் என்பார் திருவள்ளுவர்.

1. தமிழர் தாம் வாரும் நிலங்களை எத்தனை வகையாகப் பிரிப்பர் ?

தமிழர் தாம் வாழும் நிலங்களை ஐந்து வகையாகப் பிரிப்பர்.

2. நிறத்தின் அடிப்படையில் தமிழர் நிலங்களை எவ்வாறு வகைப்படுத்தினர் ?

செம்மண், உவர்நிலம், களர்நிலம்.

3. செம்புலப் பெயல் நீர் போல – இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூலின பெயர் என்ன ?

குறுந்தொகை

4. இப்பத்தியில் இடம் பெற்றுள்ள புறநானூற்று வரிகளை எடுத்தெழுதுக

‘அகல்வயல் பொழிந்தும் உறுமிடத்துதவா உவர்நிலம்’’

5. கல்லாதவர்க்கு திருவள்ளுவர் கூறும் உவமையை எடுத்தெழுதுக.

எதற்கும் பயன்படாத நிலம் களர்நிலம், இதனைப் பயவாக் களரனையர் கல்லாதவர் என்பார் திருவள்ளுவர்.

38. கீழ்க்காணும் சூழலைப் படித்து அது குறித்துக் கேட்கப்பட்டுள்ள வினாவிற்கு விடை எழுதுக.

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாளாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்தும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவர் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

1. பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா ?

சரியே.

2. நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும் ?

நாம் ஒழுக்கம் உள்ள நண்பர்களுடன் நட்புக் கொள்ள வேண்டும்.

3. உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் புகைபிடித்தல் முதலான செயல்களில் ஈடுபட உங்கள் நண்பர்கள் உங்களை அழைக்கிறார்கள். அப்போது நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள் ?

அ) நண்பருடன் நட்பு நீடிக்க வேண்டும். எனவே அவர்களின் பேச்சுக்கு உடன்படுவேன்.

ஆ) நீங்கள் செய்வது தவறு – இதனை அனைவரிடமும் வெளிப்படுத்தி விடுவேன் என்று கூறுவேன்.

இ) எனக்கு இது போன்ற செயல்களில் விருப்பம் கிடையாது என்று மென்மையாக மறுத்து விடுவேன்.

விடை : (இ)

ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க

பதினொன்றாம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகிறது. தேவி, அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள், அவள் கண்கள் இரண்டும் சிவந்து விட்டன. ஆனால் அவள் பெற்றோர் அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.

''நான் சொன்னால் சொன்னது தான் நீ படித்தது போதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்ய வேண்டியது தான்'' என்று கூறியவாறே அவளுடைய தந்தை வெளியே சென்று விட்டார். ''அப்பா உனக்கு நல்லது தான் செய்வார். அப்பாவின் பேச்சைக்கேள்'' என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள், தேவி.

1. இந்நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள் ?

அப்பா, உங்கள் நிலை எனக்குப் புரிகிறது. ஆனால் என் நிலையை எண்ணிப்பாருங்கள். பெண்கள் அவசியம் கல்வி கற்க வேண்டும். அவ்வாறிருக்க உங்கள் மகள் அரைகுறைப்படிப்போடு கல்வியை முடித்துக் கொள்வது சரியா ? பெண்களுக்குச் சட்டபூர்வமான திருமண வயது 23. நான் பட்டக்கல்வி பெற்ற பின் திருமணம் முடித்தால், அது எனக்கும் என் குடும்பத்துக்கும் பயனுள்ளதாய் இருக்கும், அப்பா! என்று தேவி தன் தந்தையிடம் பக்குவமாய்க் கூறியிருப்பாள்.

2. இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள் ?

திருமணம் செய்வதற்கு இஃது உரிய வயதன்று என்று ஆசிரியர் மூலம் பெற்றோருக்குப் புரிய வைப்பேன்.

<u>பகுதி – ஈ</u>

**39. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

1. ''டாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே. பட், நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி ? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச் சொல்லிக் கால் பண்ணியிருக்கிறேன்''.

''சண்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்கிறதே, டோன்ட் வொர்ரி. டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹேப்பி தானே'.

**விடை:**

அப்பா, வர்ற ஞாயிறு எனக்கு பிறந்தநாள், ஆனால் நீங்கள் இன்னும் எனக்கு பிறந்தநாள் ஆடை எடுக்கவில்லையே, ஏன் அப்பா ? என்னோட நண்பர்களையெல்லாம் வீட்டுக்கு வரச் சொல்லி அழைப்பு விடுத்திருக்கின்றேன்.''

''ஞாயிறு வருவதற்கு இன்னும் ஆறு நாட்கள் இருக்கிறதே, கவலைப்பட வேண்டாம். நாளை மாலை கடைக்குப் போகலாம். இப்ப உனக்கு மகிழ்ச்சித் தானே''.

2. சுரேஷ் வாட் ஹேப்பண்ட் ? ஏன் லேட்டா வர்றே ? வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனால தான் லேட். சரி சரி பஸ் எத்தனை மணிக்கு வரும் ? டிக்கெட் கிடைச்சுதா ?

பஸ் டென் தர்ட்டிக்கு வரும். லாஸ்ட் வீக்கே, ரிசர்வ் செய்தாச்சு

**விடை**

சுரேஷ் என்ன செய்தி ? ஏன் தாமதமாக வர்றே ? வழியிலே ஒரே போக்குவரத்து நெருக்கடி அதனால்தான் தாமதம். சரி சரி பேருந்து எத்தனை மணிக்கு வரும் ? பயணச்சீட்டு கிடைத்ததா ?

பேருந்து பத்து முப்பதுக்கு வரும். போன வாரமே முன் பதிவு செய்தாச்சு.

3. பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கை தூக்கிப் போட்டு விட்டு, ''மம்மி வாட்டர்'' என்று குரல் கொடுத்தான்.

''பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய் ? கை கால்களை வாஷ் செய்து கொண்டு வா, சூடாக உனக்கு பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன். போய் யூனிபார்ம் மாற்றிக் கொண்டு வா'' என்றாள், அவன் தாய்

''போம்மா'' என்று கூறிக்கொண்டு பேனைச் சுழலவிட்ட பாரி, டிவியைப் போட்டான்.

“ஸ்கூல் விட்டு வந்தவுடனே எதற்கு டிவி? ஹோம் ஒர்க் செய்து விட்டு அப்புறம் பார்க்கலாம்” என்றாள், அவன் தாய்.

**விடை:**

பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி, தன் புத்தகப்பையைத் தூக்கிப் போட்டு விட்டு, “அம்மா குடிநீர்“ என்று குரல் கொடுத்தான்.

“பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? கை கால்களை சுத்தம் செய்து கொண்டு வா, சூடாக உனக்கு பிடித்த சிற்றுண்டி செய்து வைத்திருக்கிறேன். போய் சீருடை மாற்றிக்கொண்டு வா” என்றாள், அவன் தாய்

“போம்மா” என்று கூறிக்கொண்டு மின் விசிறியைச் சுழலவிட்ட பாரி, தொலைக்காட்சியைப் போட்டான்.

“பள்ளி விட்டு வந்தவுடனே எதற்கு தொலைக்காட்சி? வீட்டுப்பாடம் செய்து விட்டு அப்புறம் பார்க்கலாம்” என்றாள், அவன் தாய்

ஆ. தமிழ் எண்களை எடுத்து எழுதுக.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | மூ | | ரு | சா | எ | அ | | கo |

**40.** கீழ்க்காணும் ஆங்கில உரைப் பத்தியைத் தமிழாக்கம் செய்து எழுதுக.

1. Food is essential for all living beings. Without food man cannot live long. Every man has to eat a certain quantity of food. If he eats less than that quantity his health will fail and he will fall ill. So, every man has to eat enough food to live.

   உயிரினங்கள் வாழ உணவு மிக முக்கியமானது. உணவின்றி மனிதனால் நீண்டகாலம் வாழ முடியாது. ஒவ்வொரு மனிதனும் சிறிதளவேனும் உணவு உட்கொள்ள வேண்டும். உணவின் அளவு குறையுமானால் நாம் நோய்வாய்ப்பட நேரிடும். எனவே, நாம் அனைவரும் போதிய அளவு உணவை உட்கொண்டு உயிர் வாழ்தல் நலம்.

2. Schools do not stop with teaching the children the lesson alone. They do more. It is in the schools that the boys and girls form some regular habits. They learn to behave in an orderly way. They are corrected wherever they go wrong.

   பள்ளிகளில் குழந்தைகளுக்குப் பாடங்கள் மட்டுமே போதிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு மற்றவற்றையும் கற்றுத் தருகின்றனர். பள்ளிகளில் மாணவ, மாணவியர் பல நல்ல பழக்க வழங்கங்களைக் கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் ஒழுங்கான முறையில் பழகிக் கொள்ளவும் செய்கிறார்கள். அவர்கள் தவறு செய்யும் போதெல்லாம் திருத்தப்படுகிறார்கள்.

3. Gandhiji loved and respected truth more than anything else. He thought his whole life to up hold the value of truth. From his experiment with truth, he came to know that there could not be a God other than truth. He taught us that our through, word and deed should on truth. He preached what he practiced.

   நம் தேசத் தந்தை காந்திஜி, உண்மையை மிக உயர்வாக நேசித்ததோடு மட்டுமல்லாமல் மதிக்கவும் செய்தார். தம் வாழ்க்கை முழுவதும் உண்மையின் மதிப்பைக் காப்பாற்றப் போராடினார். அவரது உண்மை என்னும் பரிசோதனையில் உண்மைதான் கடவுளை விட உயர்வானது என்று அறிந்து கொண்டார், அதனால் அவர் மக்களுக்குப் போதித்தது – தமது எண்ணம், செயல், பேச்சு இந்த மூன்றும் உண்மை சார்ந்ததாக இருக்க வேண்டும் என்று போதித்தார். அவர் தன் போதனைகளை தன் வாழ்க்கையில் கடைபிடித்து வந்தார்.

**40.** ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

1. Health is Wealth
   நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

2. Haste makes waste
   பதறாத காரியம் சிதறாது.

3. Knowledge is Power
   புத்திமான் பலவான் ஆவான்

4. Money makes many things
   பணம் பாதாளம் வரை பாயும்

5. Prevention is better than cure
   வரும் முன் காப்பதே சாலச் சிறந்தது.

6. Slow and Steady win the race
   நிதானம் பிரதானம்.

7. Art is long but life is short
   கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு

8. Think every body alike
   தன்னைப் போலப் பிறரையும் நினை

9. Do well what you have to do
   செய்வன திருந்தச் செய்

10. Measure is a treasure
    அளவறிந்து வாழ்வதே வாழ்க்கை.